மாகாணக்கல்வித் திணைக்களம்
வடக்கு மாகாணம்
மூன்றாம் தவணை – 2025

தமிழ்மொழியும் இலக்கியமும்	இரண்டு மணித்தியாலங்கள்	22	T	I,II
	தரம் 9			

கவனிக்க

(1) எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.

(2) 1 தொடக்கம் 30 வரையான வினாக்கள் ஒவ்வொன்றிலும் 1, 2, 3, 4என இலக்கமிடப்பட்ட விடைகளில் மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க .

(3) உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (X) இடுக.

பகுதி - I

மிகப்பொருத்தமான விடையைத் தெரிவு செய்க

(1) மறுமையும் இம்மையும் இன்பம் தரும். இங்கு இன்பம் என்பது
1.துன்பம் 2.நன்மை 3.மகிழ்ச்சி 4.இனிமை

(2) இது என்ன ஒலி. இங்கு ஒலி என்பது
1.வெளிச்சம் 2.சத்தம் 3.இருட்டு 4.பொருள்

(3) ஒவ்வொரு கண்டுபிடிப்புக்குப் பின்னாலும் பல தோல்விகள் ஒளிந்துள்ளன. இங்கு தோல்விகள் என்பதன் எதிர்ச்சொல்
1.வெற்றி 2.பண்பு 3.உழைப்பு 4.மதிநுட்பம்

(4) பின்வருவனவற்றுள் காலவாகு பெயராக வருவது
1.மல்லிகை சூடினாள் 3.பொரியல் உண்டான்
2.இலங்கை வென்றது 4.கார்த்திகை பூத்தது

(5) பந்தம், திருமணம் ஆகிய சொற்களை குறிக்கும் ஒரு சொல்
1.கலி 2.ஆலம் 3.கட்டு 4.பாட்டு

(6) கையின்கண் விரல் உண்டு. இவ்வாக்கியம் உணர்த்தும் 7ம் வேற்றுமைப்பொருள்
1.இடம் இடமாதல் 3.பொருள் இடமாதல்
2.குணம் இடமாதல் 4.சினை இடமாதல்

(7) பந்து தம்பியால் அடிக்கப்பட்டது. இவ்வாக்கியம் எவ்வகை வாக்கியம்?
1.செய்வினை வாக்கியம் 3.தன்வினை வாக்கியம்
2.செயற்பாட்டுவினை வாக்கியம் 4.பிறவினை வாக்கியம்

(8) பின்வருவனவற்றில் அழைப்பிதழில் அடங்காதது
1.விளிப்பு 2.இடம் 3.கையொப்பம் 4.திகதி

(9) கத்தரிக்கு விதைபோன்று ஆமணக்கிற்கு
1.முத்து 2.கொட்டை 3.மணி 4.தாள்

(10) தென்னையின் இலை ஓலை என்பது போல கமுகின் ஓலை
1.மடல் 2.கூந்தல் 3.தாள் 4.கச்சல்

(11) கமலன் வயலுக்கு சென்றான். கமலன் நெற்பயிர்களை பிடுங்கினான்
இது எவ்வகை வாக்கியம்
1.கலப்பு வாக்கியம் 3.தனி வாக்கியம்
2.கூட்டு வாக்கியம் 4.தொடர் வாக்கியம்

Past Papers Wiki

(12) விட்டிசைக்குறியாக அமைவது
1.– 2.? 3.! 4.:-

(13) Tharox என்ற கலைச்சொல்லின் தமிழ்வடிவம்
1.புறவன்கூடு 2.வயிறு 3.நெஞ்சறை 4.உணர்கொம்பு

(14) வானளாவிய மாடமாளிகை இதில் வந்துள்ள அணி
1.தன்மை நவிற்சி 2.உயர்வு நவிற்சி 3.வஞ்சப்புகழ்ச்சி 4.தற்குறிப்பேற்றம்

(15) பின்வருவனவற்றுள் ஒரு பொருள் தரும் இணைமொழி
1.அல்லும் பகலும் 2.கோணல் மாணல் 3.இன்பதுன்பம் 4.போற்றிப்புகழ்ந்து

(16) சந்திக்கிழுத்தல் என்ற மரபுத்தொடரின் கருத்து
1.சந்தியில் நிறுத்துதல் 3.அவமானப்படுத்தல்
2.ஆபத்தில் கைவிடல் 4.கெடுதி செய்தல்

(17) பொன் + ஆபரணம் - பொன்னாபரணம் இது எவ்வகை புணர்ச்சி
1.இயல்புப்புணர்ச்சி 3.அல்வழிப்புணர்ச்சி
2.வேற்றுமைப்புணர்ச்சி 4.விகாரப்புணர்ச்சி

(18) கப்பலோட்டும் பாகன் இது எவ்வகை வழு
1.மரபு வழு 2.விடை வழு 3.கால வழு 4.பால் வழு

(19) பின்வருவனவற்றுள் பின்னொட்டாக வருவது
1.சகபாடி 2.தனிமை 3.மீயொலி 4.பிற்காலம்

(20) தங்கள் வரவு நல்வரவாகுக. இது எவ்வகை வழுவமைதி
1.பால் வழுவமைதி 3.இட வழுவமைதி
2.கால வழுவமைதி 4.எண் வழுவமைதி

(21) பின்வருவனவற்றுள் ஆக்கப்பெயராக அமைவது
1.சுடுசோறு 2.கூட்டுறவு 3.புகைவண்டி 4.துடிப்பு

(22) நண்பா மன்னித்துவிடு. இத்தொடர்
1.இரண்டாம் வேற்றுமை 3.ஐந்தாம் வேற்றுமை
2.எட்டாம் வேற்றுமை 4.முதலாம் வேற்றுமை

(23) பிற்காலத் தேவைக்காக சேமித்து வைக்கும் பொருட்களை எவ்வாறு அழைப்பர்
1.சீதனம் 3.சேமிப்பு
2.முதுசொம் 4.எய்ப்பில் வைப்பு

(24) அறிஞர் கூட்டம் அவை என்பது போல உடுக்களின் கூட்டம்
1.கணம் 2.நிறை 3.கோவை 4.ஆயம்

(25) பலாப்பழத்தில் எழுந்த வாசனை _____ என மூக்கைத் துளைத்தது
1.மளமள 2.திடீர்திடீர் 3.கமகம 4.பளபள

(26) பணம் வந்தது _____ வறுமை நீங்கவில்லை
1.எனவே 2.ஆயினும் 3.உம் 4.அப்போது

(27) சுயமுன்னேற்ற நூல்கள் தரும் புஸ்வாணத் தன்னம்பிக்கை. இங்கு புஸ்வாணம் என்பது
1.பயனற்றது 2.பயனுள்ளது 3.நிறைவானது 4.உண்மையானது

(28) விடாமுயற்சி பயன்தரும் என்பதைக் குறிக்க பயன்படும் பழமொழி
1.ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா
2.அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும்
3.இளமையில் கல்வி சிலையில் எழுத்து
4.கிணறு வெட்ட பூதம் புறப்பட்டது

(29) எறும்புக் குடும்பம் என்ற கதையின் ஆசிரியர்
1.புதுமைப்பித்தன் 2.ரங்கநாதன் 3.கதிரேசன் 4.டொமினிக் ஜீவா

(30) பின்வரும் வாக்கியங்களை ஒழுங்குபடுத்துக
அ. இவர் சைவத்தையும் தமிழையும் தம்மிரு கண்கள் எனப்போற்றி வாழ்ந்தவர்
ஆ. யாழ்ப்பாணத்தில் நல்லூரில் பிறந்தவர்தான் ஆறுமுகநாவலர்
இ. கண்டன நூல்களை எழுதியதோடு பல நூல்களை அச்சிட்டும் தந்துள்ளார்
ஈ. வித்தியானுபாலன அச்சியந்திரசாலை என்ற அச்சகத்தை நிறுவினார்
1.ஆ,ஈ,இ,அ 2.ஈ,ஆ,இ,அ 3.ஆ,அ,ஈ,இ 4.ஈ,அ,ஆ,இ

(30 புள்ளிகள்)

Past Papers Wiki

பகுதி 2

எல்லா வினாக்களிற்கும் விடை தருக

(1) **பின்வரும் தலைப்புகளில் ஒன்றைத் தெரிவு செய்து 150 சொற்களில் கட்டுரை எழுதுக**

1) இயற்கை வளங்களைப் பாதுகாப்போம்
2) மலர்களும் பயன்பாடும்
3) கற்பதால் வரும் பயன்கள்
4) வீதி விபத்துக்கள்

(15 புள்ளிகள்)

(2) **பின்வரும் தலைப்பில் 75 சொற்களில் அமையுமாறு கடிதம் எழுதுக**

அ) உம்மை உமது கிராம சமூக அபிவிருத்தி மன்றச் செயலாளர் எனக் கருதி உமது பிரதேசத்தில் கழிவுப்பொருட்களை முறையாக அகற்றித் தருமாறு உமது பகுதி பிரதேச சபைச் செயலாளருக்கு கடிதம் எழுதுக

(10 புள்ளிகள்)

(3) **பின்வரும் கூற்றுக்கள் யாரால் யாருக்கு கூறப்பட்டது எனக் குறிப்பிடுக**

1) "சாதுரியம் நிறைந்தவர்கள் பெண்கள் நீங்கள் அதனை நிரூபித்து விட்டீர்களே."

2) "ஏன் தம்பி பொய் சொல்ல வேணும் என்ரை மூத்தவன் இப்ப ராக்சியிலே வேலை செய்யுறான்"

3) "நீ மகிழ்ச்சியாக இருப்பது பற்றி எனக்கு மகிழ்ச்சியே ஆனால் நான் எப்போதும் மகிழ்ச்சியை நம்பியதில்லை."

4) "இந்த வீட்டில் இருக்கிற இளைய பிள்ளைக்கும் காலம் சரியில்லை ஏதோ செய்வினை சூனியம் ஏவியிருக்கு"

5) "நீ உலகம் தெரியாதவள் கலீபா என்ன பார்த்துக் கொண்டா இருக்கிறார்.?"

(10 புள்ளிகள்)

PAST PAPERS WIKI

(4) **பின்வரும் பாடலை வாசித்து அதன் கீழ்வரும் வினாக்களிற்கு விடை தருக**

காய்மாண்ட தெங்கின் பழம் வீழக் கமுகின் நெற்றிப்
பூமாண்டதீந்தேன் தொடைகீறி வருக்கை போழ்ந்து
தேமாங்கனி சிதறி வாழைப்பழங்கள் சிந்தும்
ஏமாங்கத மென்றிசையால் திசை போய துண்டே

1) இங்கு சிறப்பிக்கப்படும் நாடு எது?
2) இந்நாட்டின் இயற்கை வருணனை எவ்வாறு கூறப்பட்டுள்ளது?
3) வருக்கை என்பதன் கருத்து யாது?
4) இப்பாடல் இடம்பெறும் காப்பியம் எது?
5) இங்கு குறிப்பிடப்படும் வான் பயிர்கள் 03 தருக?

(10 புள்ளிகள்)

(5) **பின்வரும் சொற்களை வைத்து வாக்கியம் அமைக்குக.**

1) பதிவிரதை
2) தினசரி
3) கண்கூடு
4) பறவை
5) பென்னம் பெரிய

(05 புள்ளிகள்)

(6) **பின்வரும் வினாக்களிற்கு சரியான விடை தருக?**

1) சங்ககாலச் சான்றோரான பிசிராந்தையார் இக்கட்டுரையில் எவ்வாறு சித்தரிக்கப்படுகின்றார்?
2) கண்ணுவ முனிவரின் சீடர்கள் தன்னிடம் எதனைக்கோருவர் என துஷ்யந்த மகாராஜா எதிர்பார்த்தார்?
3) காட்டுவழி என்ற கவிதையில் செவிக்கு இன்பம் அளிப்பவை எவையெனக் கூறப்பட்டுள்ளன?
4) எடிசன் மின்குமிழைக் கண்டுபிடித்த முறையினைக் குறிப்பிடுக
5) நளமகராஜனின் ஆட்சிச்சிறப்பு எவ்வாறு கூறப்பட்டுள்ளது
6) எல்லோருக்கும் ஒவ்வொன்று எளிது என்பதனை ஔவையார் எவ்வாறு வலியுறுத்துகிறார்?
7) எறும்புகள் தமது புற்றுக்களை எவ்வாறு அமைக்கின்றன?
8) இனிய சொற்களைப் பேசுவதால் ஏற்படும் நன்மைகள் எவை?
9) மலைநாட்டில் காணப்படும் ஊர்கள் 03 தருக
10) கனகாம்பரம் அழகு என்பதற்குக் கொடுக்கப்படும் விளக்கம் யாது?

(20 புள்ளிகள்)

PAST PAPERS WIKI
WWW.PastPapers.WiKi
Downloaded From Past Papers WiKi - Sri Lanka's Largest Past Papers Library